# மாநகர் மன்ற கிடங்கில் இருந்த 130 மோட்டார் சைக்கிள்கள் தீப்பற்றின

**நமது நிருபர்**



கோலாலம்பூர், அக்.29- தாமான் கொனாட்டிலுள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் வாகனச் சேமிப்புக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த 130 மோட்டார் சைக்கிள்கள் தீப்பற்றின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.33 மணிக்கு இச்சம்பவம் தொடர்பில் அவசர அழைப்பு வந்ததாக கோலாலம்பூர் தீயணைப்பு மீட்புத் துறையின் நடவடிக்கை மைய பேச்சாளர் தெரிவித்தார்.



சம்பவம் நிகழ்ந்த இடத்திற்குத் தீயணைப்பு இயந்திரத்தில் பண்டார் துன் ரசாக் மற்றும் செராஸ் தீயணைப்பு நிலையங்களைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் 10 பேர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு சென்றடைந்ததும் மாநகர் மன்றத்தின் வாகனச் சேமிப்புக் கிடங்கில் இருந்த பழைய மோட்டார் சைக்கிள்கள் தீப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீ முழுமையாக அணைக்கப்பட்டு விட்டது. இதில் பல்வேறு வகையான 130 மோட்டார் சைக்கிள்கள் சேதமுற்றன.

இச்சம்பவத்திற்கான காரணத்தைத் தடயவியல் துறை இன்னும் விசாரணை மேற்கொண்டு வருவதாக ஓர் அறிக்கையில் அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.